RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

# சங்க கால இலக்கியங்களில் கலை மற்றும் மனித நேயச் சிந்தனைகள்

அ.சு. ஆபிதா [அ] *

[அ] தமிழ்த்துறை, தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை, புதுக்கல்லூரி (தன்னாட்சி), இராயப்பேட்டை, சென்னை - 14, தமிழ்நாடு, இந்தியா

# A Study of Art and Humanistic Thought in Sangam Literature

**A.S. Abitha** [a, *]

[a] Department of Tamil, New College, Royapettah, Chennai-600014, Tamil Nadu, India

*Corresponding Author:
habibullahabida30@gmail.com

**ABSTRACT**

Sangam literature constitutes one of the earliest and most valuable sources for understanding the culture, lifestyle, and intellectual traditions of the ancient Tamils. These classical works preserve not only the literary excellence of the Sangam age but also the artistic sensibilities and humanistic ideals that shaped Tamil society. The poems portray a wide range of universal human values, including love, friendship, hospitality, compassion, generosity, and mutual respect, reflecting the ethical foundation of the ancient Tamil way of life. At the same time, Sangam poets employ remarkable artistic techniques to depict nature, human emotions, and social life with exceptional aesthetic refinement. The harmonious relationship between the natural environment and human experience is expressed through vivid imagery, symbolic landscapes, and poetic imagination, demonstrating the sophisticated artistic vision of the Sangam poets. These literary works reveal that art was not merely a means of aesthetic expression but also a powerful medium for communicating moral values and promoting social harmony. This article examines the artistic dimensions and humanistic thought reflected in Sangam literature, highlighting how these classical works integrate aesthetic beauty with ethical ideals. The study emphasizes that the enduring significance of Sangam literature lies in its ability to present art and humanity as inseparable elements of a refined and compassionate civilization.

**Keywords:** humanistic ideals, Sangam poets, relationship, Sangam literature

## முன்னுரை

சங்க இலக்கியம் உலக இலக்கியங்களுள் ஒன்று. மிகப்பழமையானது. பாரம்பரியம் மிக்கது. முதிர்ந்த ஒரு மொழியின், கனிந்த ஒரு மக்கள் வாழ்க்கையின் பிரதிபலிப்பாகும்.இவை கி.மு. 500 முதல் கி.பி. 200 வரை உள்ள காலப்பகுதியில் எழுதப்பட்ட செவ்வியல் இலக்கியங்கள் ஆகும். சங்க இலக்கியங்கள் மொத்தம் 473 புலவர்களால் பாடப்பட்ட 2381 பாடல்களைக் கொண்டவை. 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களான சி.வை. தாமோதரம்பிள்ளை, உ.வே. சாமிநாத ஐயர் ஆகியோரின் முயற்சியினால் சங்க இலக்கியங்கள் அச்சுருப் பெற்றன. சங்க கால இலக்கியங்களில் காணப்படும் கலைப் பண்புகளையும் மனித நேயச் சிந்தனைகளையும் அறிந்து கொள்ளுதல் இன்றைய சமுதாயத்திற்குப் பயனுள்ளதாகும்.

## சங்க காலக் கலைகள்

ஆடலும், பாடலும் மனித குலத்தின் முதற் கலை வடிவங்களாகும். அக்கலை வடிவங்கள் மனிதனின் தேவைகளுக்கும், அவர்கள் வாழ்ந்த சூழல்களுக்கும், அவர்களது நம்பிக்கைகளுக்கும் ஏற்ப, அக்கலைகளின் பொருளும் வடிவங்களும் மாற்றம் பெற்றுள்ளன. சங்க இலக்கியங்களில் பண்டைய ஆடற்கலை, இசைக்கலை பற்றிய பல்வேறு தரவுகள் இடம்பெற்றுள்ளன. பாணர், பாடினியர், கூத்தர், விறலியர், வயிரியர், கோடியர் என ஆண்களும் பெண்களும் சேர்ந்து பாடல், ஆடல், ஆகிய கலைகளை நிகழ்த்தியும் பேணியும் வந்துள்ளனர். கலைஞர்களை மன்னரும் வள்ளல்களும் பேணினர். சிலப்பதிகாரத்தில் கூத்துக் கலையின் நுட்பங்களும், அவை சமூக நிகழ்வுகளிலும், வழிபாட்டிலும் பயன்பட்டு வந்தமை பற்றியும் அறியப்படுகின்றன. வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை, துணங்கைக் கூத்து, வெறியாடல் என்பன தெய்வ வழிபாட்டுக்குரிய கூத்துக்களாக விளங்கின. மேலும் போரில் வெற்றி பெற்ற மன்னன், பகைவருடைய யானைப் பட்டத்திலுள்ள பொன்னைக் கொண்டு பாணரது தலைகளில் மாலையாகச் சூட்டுவதோடு, பொன் தாமரைப் பூக்களையும் பாணர்களுக்குப் பரிசாக வழங்கினான் எனப் புறநானூறு பின்வருமாறு குறிப்பிடுகிறது.

“ஒன்னார் யானை ஓடைப்பொன் கொண்டு

பாணர் சென்னி பொலியத் தைஇ

வாடாத் தாமரை சூட்டிய..” (புறம்: 126 : 1-3)

மேலும் பாணனின் பெண்பாற் சொல் பாடினி ஆகும். இசைக் குழுவினருடன் பாடினியரும் சேர்ந்து சென்று இசை நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டுள்ளனர். சான்றாகப் பொருநராற்றுப்படையில் பாடினி குறித்துப் பாடப்பட்டுள்ளது அவை,

“அறல்போற் கூந்தல் பிறைபோல் திருநுதல்

கொலைவில் புருவத்துக் கொழுங்கடை மழைக்கண்

இலவுஇதழ் புரையும் இனமொழித் துவர்வாய்

பல உறு முத்தின் பழிதீர் வெண்பல

மயிர்குறை கருவி மாண்கடை அன்ன

பூங்குழை ஊசல் பொறைசால் காதின்” (பொருநர் : 25-30)

இக்கலைகள் சமூக ஒற்றுமையை வளர்த்தன. ஆகவே சங்க காலக் கலைகள் தமிழர் பண்பாட்டின் பெருமையை எடுத்துக்காட்டும் முக்கியமான ஆதாரங்களாகும்.

## மனித நேயச் சிந்தனைகள்

சங்க கால இலக்கியங்கள் மானுடநலத்தையும், அறத்தையும் மையமாகக் கொண்ட சிறந்த மனிதநேயச் சிந்தனைகளைப் பதிவு செய்துள்ளன. விருந்தோம்பல், ஈகை, பகைவரிடமும் அன்பு காட்டுதல், போர் அறம், இயற்கை பாதுகாப்பு, மற்றும் சாதி, பேதமற்ற சமூக உறவு ஆகியவை சங்க இலக்கியங்களில் காணப்படும் முக்கிய மனிதநேயக் கூறுகளாகும். இவை அன்பே அறம் என்பதை வலியுறுத்துகின்றன. சங்க இலக்கியங்களில் விருந்தோம்பல் முக்கியமான மனிதநேயச் சிறப்பாகக் காணப்படுகிறது. அக்கால மக்கள் தங்கள் வீட்டிற்கு வரும் விருந்தினர்களை அன்புடன் வரவேற்று உணவு வழங்குவது ஒரு கடமையாகக் கருதினர். மேலும் பிறருக்காக உதவும் மனப்பான்மை, ஏழைகளுக்கு இரக்கம் காட்டுதல் போன்ற பண்புகளும் சங்கப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

## புலவர்களின் சமய நோக்கும் நன்னெறி புகட்டலும்

சங்ககாலத்தில் இயற்கையினை நம்பி இயற்கையோடு வாழ்ந்த மக்களுக்கு சமய நெறிகளை கற்பிக்க வேண்டிய தேவை அக்காலப் புலவருக்கு இருக்கவில்லை. அதனால் சங்கப் புலவர்கள் மதம் சார்ந்த பாடலுக்கு முதன்மை அளிக்கவில்லை. இதே போன்ற நிலைப்பாடு தான் கிரேக்க நாட்டில் வாழ்ந்த புலவர்களுக்கும் இருந்தது என்பதை தனிநாயக அடிகள் சுட்டிக் காட்டுவர். இரு நாடுகளிலும் புலவர்களே மக்களுக்கு நன்னெறியை புகட்டினர் என்பதை அடிகள் குறிப்பிடுகிறார். சங்கப் புலவர்கள் மக்களுக்கு மிக எளிதில் விளங்கத்தக்க வகையில் அறிவுரைகளை பல்வேறு பாடல்களில் பொன்மொழிகள் போன்றே பதிவு செய்துள்ளார்கள். இப்புலவர்கள் எவ்வாறு அறத்தை மக்களுக்கு அறிவுறுத்தினர் என்பதற்கு புறநானூற்றின் சில பாடல் வரிகளை சான்றுகளாக கூறலாம்.

"அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத்

தமிழர் உண்டலும் இலரே

புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்

உலகுடன் பெறினுங் கொள்ளலர்" (புறம் : 182)

"நல்லது செய்தல் ஆற்றீராயினும்

அல்லது செய்தல் ஓம்புமின்" (புறம். 195: 6-7)

"மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்

தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே" (புறம். 165: 1-2)

இதன் மூலம் மக்களின் அன்றாட வாழ்க்கை நடைமுறையில் காணப்படும் உளம் சார்ந்த பொருண்மைகளை அடிப்படையாகக் கொண்டு மக்களுக்கு நல்லென கூறும் உளவியல் போக்கு உடையவர்களாகவே சங்க சான்றோர் திகழ்ந்தனர் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

## போரில் கடைப்பிடிக்கும் அறப் பண்புகள்

வீரநிலைக் கால அரசியலில் போர் அறமும் போர் மறமும் தவிர்க்க முடியாதவைகளாகவே அமைந்திருந்தன, இருப்பினும் சங்க காலத்தில் போர் அறங்கள் பேணப்பட்ட செய்திகளும் புறப்பாடல்களில் கூறப்பட்டுள்ளன. போர்க்காலங்களில் பெண்டிர், நோயாளர் முதலானோரை, வீட்டு விலங்குகளுடன் பாதுகாப்பு தேடிக் கொள்ளுமாறு பொது அறிவித்தல் செய்யும் போர்க்கால வழக்கம் அக்காலத்தில் இருந்துள்ளது, என்பதை பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடும் புறநானூற்றுச் செய்யுள்,

ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்

பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்

தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்

பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்

எம் அம்பு கடிவிடுது நும்மரன் சேர்மின் என

அறத்தாறு நுவலும் பூட்கை" (புறம் : 9)

புலவர்கள், மன்னருக்கு அருளறம் போதித்துப் போரை நிறுத்திய நிகழ்வுகள் பற்றியும் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. தொடர்ச்சியான போர்களினால் தமிழினம் அழிந்து கொண்டே இருந்தது அவ்வேளையில் ஔவையார் போரை நிறுத்தி மக்கள் உயிரை காக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அதியமானுக்கும் தொண்டைமானுக்கும் போர் ஏற்படப் போகிறது என்ற செய்தியை

ஔவையார் அறிந்தார். இப்போரை நிறுத்த வேண்டும் என நினைத்து இணக்கத் தூதுவராகச் சென்று செயல்பட்டமையும் குறிப்பிடப் படுகின்றன.

## செம்மை வாழ்விற்கான நல்லியல்புகள்

மனிதன் நன்மைகள் செய்து வாழ வேண்டும், நன்மைகள் செய்ய முடியாவிட்டாலும் பரவாயில்லை, ஆனால் தீமை செய்வதைத் தவிர்த்து வாழ வேண்டும். இவ்வாறு மன்னர்களும் மக்களும் நல்வழியில் வாழ வேண்டும் என்று சங்கப் புலவர்கள் அறிவுரை கூறியுள்ளனர்.

நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்

அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்

எல்லோரும் உவப்பது அன்றியும்

நல்ஆற்றுப் படுஉம் நெறியும்மார் அதுவே. (புறம்.195: 6-9)

மேலும், மனித வாழ்வை செம்மைப்படுத்தி வாழ்வதற்கான கருத்துக்களை கொண்ட பாடல்வரிகள்,

"யாதும் ஊரே: யாவரும் கேளிர்

தீதும் நன்றும் பிறர் தர வாரா:

நோதலும் தணிதலும் அவற்றோரன்ன:

சாதலும் புதுவது அன்றே: வாழ்தல்

இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே" (புறம் : 192)

யாதும் ஊர்தான் எல்லோரும் உறவினரே என்று துணிவோடு சாதீயத்தை மறுத்துரைத்தவர் கணியன் பூங்குன்றனார். மனிதர்கள் எல்லோரும் சமம், சமநிலையுடன், அறிவுடன் வாழ்க்கையை ஏற்றுக்கொண்டு வாழ வேண்டும். என்ற கருத்தை இப்பாடல் மூலம் வெளிப்படுத்துகிறார்.

## நவீன காலத்துடன் தொடர்பு

சங்க கால இலக்கியங்களில் கூறப்படும் மனித நேயச் சிந்தனைகள் இன்றைய நவீன சமுதாயத்திற்கும் மிகவும் பொருத்தமானவையாக உள்ளன. அன்பு, இரக்கம், விருந்தோம்பல், ஒற்றுமை போன்ற பண்புகள் மனிதர்களின் நல்ல வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை மதிப்புகளாகும். இன்றைய உலகில் தொழில்நுட்ப வளர்ச்சி அதிகரித்தாலும் மனிதர்களுக்கு இடையிலான அன்பும் புரிதலும் குறைந்து வருவது காணப்படுகிறது. இந்நிலையில் சங்க இலக்கியங்கள் கூறும் மனிதநேயக் கருத்துகள் மக்களிடையே நல்லிணக்கத்தையும் சமத்துவ உணர்வையும் வளர்க்க உதவுகின்றன. ஆகவே சங்க கால இலக்கியங்களில் உள்ள மனித நேயச் சிந்தனைகள் நவீன கால மனித வாழ்க்கைக்கும் வழிகாட்டியாகத் திகழ்கின்றன.

## முடிவுரை

சங்க கால இலக்கியங்கள் பழந்தமிழர் சமூகத்தின் உயர்ந்த பண்பாட்டையும், வாழ்வியல் சிந்தனைகளையும் வெளிப்படுத்துகின்றன. இவ்விலக்கியங்களில் கலைநயம் மட்டுமல்லாமல் மனிதர்களுக்கிடையிலான அன்பு, இரக்கம், ஒற்றுமை போன்ற மனிதநேய மதிப்புகளும் வலியுறுத்தப்படுகின்றன. சங்கப் புலவர்கள் தங்கள் பாடல்களின் மூலம் மனித வாழ்க்கையின் உண்மை நிலைகளையும் உயர்ந்த பண்புகளையும் எடுத்துரைத்துள்ளனர். இதனால் சங்க இலக்கியங்கள் தமிழ் சமுதாயத்தின் பண்பாட்டு அடையாளமாகவும், மனிதநேய சிந்தனைகளின் சிறந்த எடுத்துக்காட்டாகவும் விளங்குகின்றன.

## References

ச. அகத்தியலிங்கம், சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களே, மணிவாசகர் பதிப்பகம், சென்னை

பு. பாலாஜி, வி.பி. புருஷோத்தமன், சங்க இலக்கியம் - ஒரு கண்ணோட்டம், நாகு வெளியீடு, சென்னை

இரா. ருக்மணி, முல்லைச் செல்வி, சங்க இலக்கியத்தில் வாழ்வியல் சிந்தனைகள், காவ்யா பதிப்பகம், சென்னை

பாலசுந்தரம் இளையதம்பி, சங்க இலக்கியம்: ஒரு புதிய கண்ணோட்டம், மணிமேகலைப் பிரசுரம், சென்னை

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License